வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 318/2021

வழக்கு சாட்சி LW3 / PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணகுமார், முதல் நிலை காவலர், புழல் மத்திய சிறை 1 | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாலமாமுண்டிநாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 52 |

தேதி 11.12.2024

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புழல், மத்திய சிறை 1ல் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2021 அன்று நான் நேர்காணல் அலுவலராக பணிசெய்தேன். அப்போது நான் முதல்தலைமை காவலராக பணிபுரிந்தேன். அன்று காலை 11 மணிக்கு ராதா (எ) ராதாகிருஷ்ணன் என்ற சிறைவாசிக்கு வழக்கறிஞர் மனு வந்ததின்பேரில் அவரது தனியறை தொகுதிக்கு தகவல் அளித்து QRT காவலர் தினு அவர்கள் நேர்காணல் அறைக்கு மேற்படி எதிரியை அழைத்து வந்தார். வரும்போது நேர்காணல் அறையில் எதிரி ராதாகிருஷ்ணன் காவலர் தினுவை தகாத வார்த்தையால் ஒத்தா என்று சொல்லி வெளியில் வந்தால் உன்னை வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். நான் உடனே கண்டித்ததும், அமைதியாகி விட்டார். காவலர் தினுவை வெளியே அனுப்பிவிட்டேன். நேர்காணல் முடிந்தபின் மேற்படி சம்பவம் குறித்து சிறை அலுவலரிடம் தகவல் அளித்தேன். அதன்பேரில் சிறை அலுவலர் புகார் அளித்தார். அதன் பேரில் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் நேர்காணல் எத்தனை மணிக்கு என்றால் சனிக்கிழமை காலை 10 மணி முதல் 1 மணிவரை. நான் சம்பவத்திற்கு பிறகும் வழக்கறிஞர் நேர்காணல் அறையில்தான் இருந்தேன் என்றால் ஆமாம். எதிரி வரும்வழியில் பிரச்சனை செய்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். வரும் வழியில் என்ன நடந்தது, யார் பிரச்சனை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சம்பவமே வரும் வழியில் நடக்கவில்லை என்றாலும் எனது உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**